DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 14.08.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.03/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.11 |
| Name | : | சுப்பிரமணி |
| Father Name | : | வெங்கடராமன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 14.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கீரைக்காட்டில் குடியிருந்து கிளேஷ் புரூக் எஸ்டேட்டில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி அதே எஸ்டேட்டில் வேலை பார்த்து வந்தார். 11.03.2024-ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் எஸ்டேட்டிற்கு வேலைக்கு சென்றபோது ஆஜர் எதிரி மிளகு எடுத்துவிட்டதாக எஸ்டேட்டில் பேசிக்கொண்டிருந்தனர். அதன்பின்பு 14.03.2024-ம் தேதி போலீசார் எஸ்டேட்டிற்கு வந்து ஆஜர் எதிரி மிளகு எடுத்தது குறித்து என்னிடமும், அருணாசலத்திடமும் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். பின்பு ஆஜர் எதிரி வீட்டிலிருந்து மிளகு 1 மூட்டை காப்பி 3 மூட்டை எடுத்து வந்து எஸ்டேட்டில் வைக்கப்பட்டிருந்ததை போலீசார் நீதிமன்றத்திற்கு எடுத்துச்சென்றார்கள்.

என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த 2வது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2–வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த 2–வது கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி கையொப்பத்தை போலீசார் எஸ்டேட்டில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இல்லை.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R. Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.